சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் : 1889 விரோதி ஞு ஆவணி மீ 28-ஆம் உ

உ
சிவமயம்

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுபெற்றது. பதிவு இல - 2492.

# இந்து சாதனம்

பிரதி விலை, ரூ. 1-00.

Hindu Organ

புத் 99, 100] யாழ்ப்பாணம் - விபவ ஞு ஆடி மீ (05 - 08 - 1988 [இல - 6

University of Jaffna Sri Lanka
Library

## கோணேசப் பெருமானைக் கும்பிடப் பூசைகளில் ஊ[illegible]யம்!

## ஆன்மீக அமைதிக்குப் பங்கம் அமைகின்றதே

திருக்கோணேஸ்வரம் ஆளுடைய பிள்ளையாராலே தேவாரம்மூலம் வணங்கப்பெற்ற திவ்விய தலம். சரித்திரத்தில் இடம் பெற்ற க்ஷேத்திரம். இயற்கை வனப்பும் எல்லையில்லா எழிலும் பரப்பும் இந்தக் குடாவிலே மகாவலி கங்கை இருவேறு ஆறுகளாகப் பிரிந்து வழிபாடு செய்து வங்காள விரிகுடாவுடனும் இந்து மகா சமுத்திரத்துடனும் சங்கமமாகத் தெய்வீகப் பொலிவு மிளிர்கின்றது.

இவ்வாறான பேறுடைய திருக்கோணமலை வாழ் பெருமக்கள் கோணேஸ்வரப்பெருமானைக் குலதெய்வமாகக்கொண்டு அக் கோயிலில் அர்ச்சித்து வணங்குவது வழமையான சால்பு. பழைமையான பண்பு.

அவ்வாறு பழகி நியமமாகக் கொண்ட நித்திய வாழ்விலே கோணேசர் கோயிலிற் பூசையில்லாமற் போனால் அபாய அறிவிப்பு என்றுதான் எண்ணுவர். விடிந்தும் விடியவில்லையேயென்று மனம் ஒடிந்துபோய் நிற்கின்றனர் திருக்கோணமலைச் சைவ சீலர்கள்.

சமய குரவர்கள் காலத்திலே திருமறைக்காட்டிலே (வேதாரணியத்திலே) அமைந்ததோர் அற்புதம் இங்கே குறிப்பிடத்தக்கது. வேதங்களாலே திருக்காப்புச் செய்யப்பட்ட வேதாரணியத் திருத்தலக் கதவு திறக்கப்பட்டு அவ்

வளர்ச்சி 3 ம் பக்கம்



### நல்லை நல்லநாயகி அம்பாள் பெரு விழாக்கள்

நல்லை நாதப் பெருமான் கோயிலில் ஆடிப் பூரஞ் சாரும் அம்பாள் விழாக்கள் 5-8-88 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11-8-88 சனிக்கிழமை தேர் உலாவும், அடுத்த நாள் தீர்த்த விழாவும் நிகழவிருக்கின்றன.

இத் திருத்தலத்திலே ஆடி அமாவாசைப் புண்ணியப் பொழுதிலே மோட்ச சிரார்த்த சங்கபிஷேகம் நடைபெறச் சட்டநாதஆலய பரிபாலன சபையார் நல்ல ஒழுங்குகள் செய்கிறார்கள்.

வன்செயலால் உயிர் சோக்கப்பெற்றவர்களின் ஆத்ம சாந்திக்கு இந்த சிரார்த்த நினைவுச் சங்கபிஷேகம் மிகவும் பொருத்தமானது.

X X X

### தென்மராட்சியிற் சன்மார்க்க யாத்திரை

#### திருமுறை முரசொலி அருளுரை

அந்நாட்களிலே தென்மராட்சி அமைந்த வேளையிலே அந்நிலத்திலே ஆலயங்கள் பலப்பல அடியார்களால் அமைக்கப் பெற்று வழிபாடு சிறப்பாக நிகழ்ந்து வந்தது.

இந் நாட்களிலே விபரீதமும் விகடமும் மேற்கொள்ள இன்னும் அசம்பாவிதங்கள் அட்டூழியங்கள் தலைப்பட நிலைமை மாறியதைப் பார்த்து மனம் பொறுத்திருந்தெண்டர்கள் இத் தென்மராட்சி முழுவதும் யாத்திரை செய்து அத்தனை ஆலயங்களையும் தரிசித்து உய்யும் வழிதேட முன் எழுந்திருக்கின்றனர்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் இத்தகைய எழுச்சியில் முழுமூச்சாக நின்று வழிகாட்டும் அநுபவமும் ஆற்றலும் மிக்கவர்.

ஆகவே சற்சங்க குழுவினர் திருத்தலங்கள்நோக்கிப் பாத யாத்திரை செய்து திருமுறை ஓதிய வண்ணம் பேரொலி — இறைஒலியாக ஊரவர்களை ஊக்கப்படுத்தி நெஞ்சில் 'அஞ்சேல்' என்ற நினைவு எழ வைக்கும் பணி திருப்பணியேயாகும்

## கந்த மூர்த்திக்குக் கார்த்திகை விழா

### காவடி எடுத்து மேவுவினை விமோசனம் வேண்டுபவர்கள்

### மாவிளக்கிட்டு மனம் ஒருப்பட்டு மயில்வாகனனை வணங்குவோர்

கார்த்திகைக் குமரன் அல்லவா, கார்த்திகை நாள் அவ்வகையிலே காந்தமுள்ளதாகக் கணிக்கப்படுகின்றது. கார்த்திகேயனுக்கு விழா வெடுப்பது விசேட நியமமாக வளங்கி வருகின்றது.

நாரதமுனிவர் தலைசிறந்த தவத்தினராக விளங்க விநாயகப் பெருமானிடம் விண்ணப்பித்த வேளையிற் கணபதிக்கடவுள் முனிபுங்கவரைக் கந்தவிரதம்அநுட்டிக்குமாறு கூறியருளினர்.

"ஆறுமாமுகத்து நம்பி பொன்னடி வழிபாடாற்றிப் பொருவில் கார்த்திகை நாள் நோன்பைப் பன்னிரு வருடங் காணும் பரிவுடன் புரிதி என்றான்"

இந்தக் கந்த விரதத்தினை மனுச் சக்ரவர்த்தி

வளர்ச்சி 3 ம் பக்கம்

### பெருந் திருவிழா

நாவற்குழி ஸ்ரீ சித்தி விநாயகர் லஆய வருடாந்த பெருவிழா எதிர்வரும் 13-08-88 சனிக்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி 26-8-88 வெள்ளிக்கிழமை தேர் உலாவும் மறுநாள் தீர்த்தமும் நடைபெறும். —

### பெருந் திருவிழா

#### துர்க்காபுரத்தில்

தொல்சீர்த் துர்க்காதேவி திருத்தலம் ஆண்டுப் பெருவிழாக்கள் ஆடி முப்பத்தோராம் நாள் (15-8-88) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரண்டு பெருந் திருஉலாக்கள் நிகழ்ந்து ஆவணி 11 ம் நாள் தீர்த்த நிகழ்ச்சியும் அடுத்த நாள் வைரவர் பொங்கலுமாக 7-8-88 நிறைவுறும்.

கொடிஏற்றம் மு.ப. 11மணி
தேர் உலா காலை 9 மணி
தீர்த்தம் காலை 8 மணி
வேட்டை விழா 23-8-88 பிற்பகல் 3 மணி.

### பூநகரியிலே யோகசுவாமிகள் புனித யாத்திரை நினைவாக வழிபாட்டு நியமங்கள்

முப்பத்தாறு ஆண்டுகளுக்குமுன் கொழும்புத்துறை யோகமுனிவர் பூநகரியிலே செல்வியாதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயிலை நல்லடியார் புடைசூழத் தரிசித்து வழிபட்ட அருள் மிகு நிகழ்ச்சியை நினைவிற் கொண்டு இக்கோயிலிலே சுவாமிகளின் அவிட்ட நாளில் (30-07-88) திங்கட்கிழமை நற்சிந்தனைப் பாராயணமும், விசேட பூசை வழிபாடு, மகேசுர பூசை நிகழ்ச்சிகளை அபிமானிகள் ஒழுங்கு செய்திருக்கின்றனர்.

யோகர் சுவாமிகள் அடிக்கடி பூநகரிப் புண்ணிய பிரதேசத்துக்குச் செல்வது வழக்கம். அவ்வமையங்களில் மெய்யடியார்கள் கூடி உபதேச மொழிகள் கேட்டு மன நிறைவுறுவார்கள் நற்சிந்தனைப் பத்திப் பாடல்கள் கூட்டுப் பிரார்த்தனையாக உள்ளத்தில் எழுச்சியை உண்டு பண்ணும் என்று அப்பொழுது அந்த அரிய நியமங்களிலே கலந்து களித்தவர்கள் கூறுவர்.

சற்சங்கம் கூடியுயர்
சைவநெறி காப்பதற்குச்
சொற்சங்க நாத
சுவாமிகள் — நற்சிந்தனையோக பத்தி
நனியமைத்தார்
பாடிநினையாது
போவோமோ நாம்.

### கலட்டியம்பதி அம்பாள்

வண் - கிழக்கு கலட்டியம்பதி எச்சாட்டி மாரியம்பாள் வருடாந்த பெருந்திருவிழா ஆடி மாதம் 15-ம் நாள் (30-7-88) துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி, பதினைந்து தினங்கள் நடைபெறும் திருவிழாக்களில் 13-8-88 சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 14-8-88 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தமும் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. அம்பிகை அடியார்கள் அன்னையின் அருள் பெற்றுய்வார்களாக.

★ எல்லாருக்கும் நல்லூரானே கதி ★



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விபவ ஹூ ஆடி மீ
(05 - 08 - 1988)

## கைம்மாறுகருதாக் கடப்பாடு

கல்வி பயிற்றுவித்தலும் கைமாறு கருதாத கடமை. அவ்வமை பயின்றோர் நன்றியாக மட்டுமல்லக் கடமையாகவும் கல்வி நிலையங்களை ஆதரித்தலும் கடப்பாடு.

கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டினை மாரிக்கும் அதன் நயம் அநுபவிக்கும் மா நிலத்துக்கும் சேர்த்து வகையாக வள்ளுவனார் கொண்டனர் காண்க.

ஈந்து உதவி புரியும் போது இருவகையினருக்கும் இன்பம் உண்டாகின்றது இயல்பு. பழைய மாணக்கர் ஈந்து உவக்கும் எழிலுடையவராகத் திகழ்வதே அவர்கள் பயின்ற பள்ளிக் கூடங்களின் பெருமையை குறிக்கும். இன்று இந்நாடு இன்னற் பட்டிருக்கின்றது இடுக்கண் தொடுத்து நிலவியதால் ஒழுங்கு குலைந்து விட்டது. பள்ளிக் கூடங்களின் நிலைமை பற்றிக் கூறவே வேண்டியதில்லை- இவற்றுக்கு உறுதுணையாக முன்வர வேண்டியவர்கள் பழைய மாணக்கர்களே அவர்கள் எங்கிருந்தாலும் இங்குள்ள நிலைமையைச் சற்று அவதானிக்க வேண்டும் ஆவன செய்ய ஆவல் கொண்டு ஆற்றி வைக்க வேண்டும். அவசரமும், அவசியமும் ஆகவுள்ள கடமையாதலால் இன்றே செய்மின் இன்னே செய்மின்.

இந்துக் கல்லூரி பத்துப் பத்தாண்டுகள் நிறைவாகி பதின்ஞோராம் பத்தில் எழுகின்றது. பழைய மாணக்கர்கள் மனதில் எழவேண்டிய மகிழ்ச்சி நன்கொடையாக மலர வேண்டும்.

இராமநாதன் கல்லூரி எழுபத்தைந் தாண்டுகள் என்ற புகழில் இயங்குப் இவ்வேளையிலே இங்கு கல்வி பயின்ற செல்விகள் எங்கெல்லாம் இருக்கின்றுர்கள் திருமணம் புரிந்த அரிவையாராகி இல்லற இன்பம் துய்த்துக் கொண்டிருக்கின்றனர். அந்த இன்பத்துடன் ஈந்து உவக்கும் இன்பம் பெறக் கல்லூரியன்னைக்கு உரிய கடமையாற்ற வேண்டுமென்று கூவி அழைக்க வேண்டியதில்லை தாமாகவே ஆமாறு பணி புரிவார்கள் என்பது உண்மை இவ்வாறே யாழ் மாவட்டக் கல்வி நிலையங்களின் பழைய மாணக்கர்கள் கடமையாற்ற முன்வர வேண்டும் உதவி செய்ய வெளிவர வேண்டும்.

✕

கலாசாலைகளிலே

## காலை மாலைக் கடவுள் வழிபாடு

யாழ் நாட்டிலே தமிழ்ப் பண்பும் சைவநெறியும் அதி அபிமானத்துடன் பேணப்பட்டு வந்தன சைவப் பாடசாலைகளிலே, பள்ளிக்கூடம் தொடங்கும் பொழுது தேவாரம் திருவாசகம் ஓதப்படுவது கட்டாயம். அவ்வாறே மாலையிற் படிப்பு முடிவடையும் பொழுதும் இந்த ஒழுங்கு கடைப்பிடித்து வரப்பட்டது.

இராமநாதன் கல்லூரியிலே செல்விகள் ஒருங்கிணைந்து திருமுறை ஓதுதல், காங்கேசன்துறை வீதியாற் செல்பவர்களின் செவிகட்கின்பம் விளைவிக்கப் பயணிகள் சற்று தாமதித்துத் செல்வர். சங்கீத ஆசிரியர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் பண்ணிசை ஆசானுக இராமநாத வள்ளலின் மதிப்பைப் பெற்றுப் பிள்ளைகளைக் குயிற் குஞ்சுகள் போல நெஞ்சையுருக்கப் பாட வழிகாட்டியிருந்தனர்.

இந்துக் கல்லூரியிலே காவடியூர் த. பொன்னையா உபாத்தியாயர் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர் மாணக்கர் அவையிலே திருமுறை ஓதுங் கடமை புரிவர். அதிபர் திரு. நெவின் செல்லத்துரைப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்குவார்.

ஒலி பெருக்கி உருவெடுக்காத காலம்மாணக்கர்எண் தொகையும் ஆயிரத்துக்குள்ளாகவே இருக்கும்.

தனியார் பள்ளிக் கூடங்களிலேயும் இந்நிகழ்ச்சி கருமக் கிரமமாக அமைந்திருந்தது.

ஆனல் இன்று இந்த அரியமுறையை முறையாகப் புரிய வசதியீனங்கள் பல குறுக்கிடுகின்ற மாணக்கர் எண்தொகை ஆயிரத்துக்கும் மேலாகி விட்டது. ஒலி பெருக்கி இன்றியமையாத தேவையாவது நூதனமல்ல.

எனவே புதியமுறை கையாளப்பட வேண்டுமா என்று கேள்வி எழுகின்றது. எவ்வகையிலும் திருமுறை ஓதும் பொழுது அப் பண்ணிசை யின்பம் நன்கு அநுபவிக்கப்பட வேண்டியிருப்பதனுற் கல்லூரியில் ஒரிடத்தில் ஒலி பெருக்கி மூலம் ஓதுவார் ஒருவர் இந்தச் சமயப் பணியை ஆற்றப் படிப்பு ஆரம்பமாவதும் மாலையிலும் அவ்வாறே பள்ளி கூடப்பணி முடிவுறுவதும் நல்ல ஒழுங்காக அமையும்.

இந்தத் திருமுறைநிகழ்ச்சியில் ஒவ்வொரு மாணக்கனும், ஆசிரியரும் பங்கு பற்றுதல் வேண்டும். பழைய பரம்பரையினுலே இதுகிக் கல்லூரியில் இவ்வாறு மாணக்கர் அவையிலேநிற்கத் தவறியவர்கள் அதிபரின் தண்டனைக்கோலுக்காளாக வேண்டியவர்களானுர்கள் என்று முதுபெரும் பழைய மாணக்கன் ஒருவர் சொல்வதுண்டு.

கல்வி ஆலயத்தில்வழிபடுதல் இடைவிடாது நிகழ்த்துவதனுல் அந்நிலையம் ஆனமுறையிலே பரிபாலனம் செய்யப்படும் வாய்ப்பைப் பெறுகின்றது- பழைய மாணக்கனே ஆலயத் தொண்டு தொடர்வதாற் சாலவும் நன்மை அடைகின்றுன்.

நன்றி மறவாமை என்ற நன்னய பண்புடையவர்கள் என்றும் வாழ்விற் பொலிந்த வண்ணம் இருப்பார்கள் மறத்தலாற் பழி எய்தும் என்றும் அறவுரை சொல்லியவர்கள் எச்சரிக்கை செய்தார் எனினும் அதை சுட்டிக்காட்டாது ஆக்க முயற்சியில் யாவரும் நேசக்கம் கொள்ள வைப்பதே மேலான முறை. ✕

## பழைய மாணக்கர்களுக்குரிய பணியொன்றுண்டு

நடைபெற்ற பலப்பல அசம்பாவிதங்கள் காரணமாக மிகவும் பாதிக்கப் பெற்றவை பள்ளிகூடங்களும் மாணக்கரின் கல்வி ஒழுக்கமும், இவை உடனேயே கவனிக்கப்பட வேண்டியன.

கல்லூரிகள் மகாவித்தியாலயங்கள் பாடசாலைகள் என்று விபரிக்கப்படும் நிலையங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பழுதடைந்துள்ளன. கட்டிடங்கள் இடிபட்டன ஒருவகை, கூரைகள் கதவுகள் சேதப்பட்டன இன்னொரு வகை உபகரணங்கள் உடைக்கப்பட்டன வேறோர் வகை இவ்வாறு பள்ளிக்கூடங்களின் நிலைமை இருக்கின்றதை உற்று நோக்கும் பொழுது இவற்றை நிவிர்த்தி செய்வதற்குப் பணம் எங்கேயிருந்து பெறலாம் என்ற கேள்வி எழுகின்றது

அரசோ, நிவாரண அளிக்கும் சேவாசங்கங்களோ முற்றுகக் கல்விக் கூடங்களைச் செம்மை செய்ய முடியும் என்று நம்பிக்கை கொண்டு யாரும் வாளா இருக்க முடியாது.

ஒவ்வொரு பாடசாலைக்கும் எவ்வளவோ எண்ணுக்கணக்கிலே பழையமாணக்கர்கள் இருக்கின்றனர். இவர்களிலே பெருந்தொகையினர் வெளிநாடுகளிலேவேலை வாய்ப்புப் பெற்று நல்ல வருவாய் பெற்றுக் கொண்டிருக்கின்றனர் இவர்கள் எண்ணி முன் தாங்கள் பெற்ற கல்விச் செல்வத்துக்கு நன்றியாகத் தாயகமாகக் கணிக்கப்படும் பள்ளிக்கூடங்களுக்கு இயன்ற அளவில் ஈகை செய்தல் வேண்டும் கல்லூரிகளிலே பழைய மணக்கர்களின் பட்டியல் செம்மையாக வைத்திருப்பது முடியாதகாரியம் முகவரி அடிக்கடி மாற்றம் அடைவதே முக்கிய காரணம்

எனவே பழைய மாணக்கர்கள் தாமாகவே முன் வந்து தங்களுக்கு கல்விப்பாலூட்டிய கன்னித்தாயாராக விளங்கும் கூடங்களுக்கு கூடியளவு பொருள் நிதியுதவி செய்வது உத்தமமாகும்.

## இராமநாதன் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் எடுக்கும் பயனுள்ள பணிகள்

இக்கல்லூரியின் அபிவிருத்தி சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இம் மாதம் நடைபெற்ற பொழுது தலைமை வகித்த கல்லூரி அதிபர் திருமதி சற்றிமதி குமாரசுவாமி அவர்கள் அங்கு கூடியிருந்த பெற்றோர், பழைய மாணக்கர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்களுக்கு நிலவும் காலநிலையிற் கல்லூரி எத்துணை இடர்ப்பட்டுப் பொழுது சிற்று சிறிதாக வழமைக்குத் திரும்பிவர முயலுகின்றதென்றும் விபரமாக எடுத்துக்காட்டிக் கல்லூரிக்குரிய உபகரணங்கள் யாவுமே நாணமற் போயினவென்றும் அவ்வகையிலே நாள்தோறும் நடைபெற வேண்டிய அலுவல்கள் தடைப்படுகின்றன வென்றும் ஒலி பெருக்கி, தட்டச்சு படியெடுக்கும் இயந்திரம் போன்ற அத்தியாவசியப் பொருட்களை பெற்றோர், நலன், விரும்பிகள் பழைய மாணக்கர்கள் மனமுவந்து வழங்க வேண்டும் மென்றும் பரிந்து கேட்டனர்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளரும், பழைய மாணக்கருமாகும் திருமதி மங்கையாக்கரசி திருச்சிற்றம்பலம் இராமநாதன் கல்லூரியை அதற்குரிய பண்பான பழைய பாரம்பரியத்திலேதொடர்ந்தும் இயங்க வைக்க வேண்டியது புகழ்பெற்ற நிறுவநர் வள்ளல் பொன் இராமநாதன் அவர்களுக்கு இந்நாடு ஆற்றும் நன்றியென்றும் கூறினர்.

சங்கக் காரியதரிசி திரு. செ இலகுநாதன் அவர்கள் கல்லூரியிலே காலையும் மாலையும் ன் நிகழ்ந்தவாறு தேவாரம் ஓதுதல் நடைபெற வேண்டியது கட்டாயமான நடவடிக்கையாக அதிபர் கையாள வேண்டுமெனச் சுட்டிக்காட்டினர்.

நலன் விரும்பிகள் சார்பிலே திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் இராமநாதன் இலட்சியத்திலிருந்து இம்மியளவும் இக் கல்லூரி திசை திருப்பக் கூடாதென்றும் எழுபத்தைந் தாண்டுகள் நிறைவுறவுள்ள எதிர்வரும் புரட்டாசி மாதத்திலே வறுமையிற் செம்மையாக எல்லோரும் கூடிக் கல்விச் செல்வம் தந்து தமிழகத்தைக் காத்த மாபுருடன் பொன் இராமநாதனுக்கு நன்றி செலுத்த விழா அமைக்க வேண்டு மென்றும் யோசனை சொல்லினர்.

★●★

மட்டுவில் தந்த

## பண்டிதமணி சி. க.

நூல் வெளியீட்டுவிழா

இரசிகர் நீர்வேலி இ. சிதம்பரப்பிள்ளை அவர்கள் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதினுர்கள். மட்டுநகர் வளர் இளைஞர் கர. சிவபாலன், இன்னொரு இரசிகர். வரலாற்று நூல் அமைப்புப் பொறுப்பேற்று அரிதில் முயன்றனர்.

நூல் வெளியீட்டுக்கு நாளும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனல் ......... அந்நாள் நாட்டு நிலைமையால் வசதியாக அமையவில்லை. பின்போடப்பட்ட நாளும் மேலும் ஒருமுறை மாற்றப்பட்டு இப்பொழுது 13 - 08 - 88 சனிக்கிழமை திருநெல்வேலி கலாசாலை வீதி கலாமன்றத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற விளம்பரம் வெளிவந்திருக்கின்றது.

பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நிகழவிருக்கும் இவ் விழாவிலே ஆசியுரை நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியசுவாமிகள் நிகழ்த்தவும் துர்க்கா தேவஸ்தானத் தலைமை தாங்கும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் பதில் அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் அவர்களும் வாழ்த்துரை வழங்கவும், புலவர் ம. பார்வதி நாதசிவம் அவர்கள் வெளியீட்டுரை செய்யவும் ஒழுங்குண்டு.

இந் நூலைக் கலாநிதி சிவஸ்ரீ நா. சுப்பிரமணியன் அவர்களும் பண்டிதர் க. உமாமகேஸ்வரன் அவர்களும் ஆய்ந்து உரைநிகழ்த்துவர்.

## கோணேசப் பெருமானை

1 ம் பக்கத்து வளர்ச்சி

வழியே சென்று சுவாமியைத் தரிசனம் செய்ய வேண்டுமென்று திருஞான சம்பந்த மூர்த்திகள் திருநாவுக்கரசு நாயனாரிடம் கூறி அவரை ஓர் பதிகம் பாடக் கேட்டதற்கிணங்கி அப்பர் அடியார்கள்

திருச்சிற்றம்பலம்

பண்ணினேர் மொழியாள்
உமைபங்கரோ
மண்ணினால் வலஞ்செய்
மறைக் காடரோ
கண்ணினால் உமைக்
காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள்
செய்மினே.

திருச்சிற்றம்பலம்

என்ற தேவாரத்தால் அர்ச்சித்தனர். அப்பொழுதும் அக்கதவு தாழ்ந்ததை நோக்கி பதிகத் திருக்கடைக் காப்பிலே "இரக்கமொன்றிலீர்......" என்று பாடி வணங்கினார். திருக்கதவம் திறந்தது. இரு குரவர்களும் கரங்கள் குவித்துப் பெருமானை வணங்கினர்.

பூட்டிய கோயில்நாட்
பூ சகோ ணேசர்க்கு
நீட்டிய தீபமும்
நிறைமலரும் — சூட்டியங்
கன்புடைமை மீண்டமைய
அப்பர் அடியார் சீர்
முன்புகன்ற பாடல் முதல்.

அந்த வகையில் ஓர் அற்புதத்தைக் கோணேசர் புரிய அடியவர் யாம் காணோமோ என்று எண்ணம் எழுகின்றது.

வெண்பா

கதவம் திறக்கமறைக்
காட்டிலே அப்பர்
உதவும் அருளன்
றுளதாற் — பொதுவில்
நடமிடும் கோணேசர்
நாவுக் கரசர்
இடமிடும் வேண்டுதலே.

○●○

## கந்தமூர்த்திக்கு....

1 ம் பக்கத்து வளர்ச்சி

அநுட்டித்து அகில உலகங்களையும் ஆண்டனர் என்றும் இன்னும் திரிசங்கு. அந்திமான் சந்திமான் ஆகியோரும் அவ்வாறு பெரும் பேறுற்றனர் என்றும் புராணம் குறிக்கின்றது.

கந்தசட்டி விரதத்துக் கொப்பானது கார்த்திகை விரதம்.

இப்படி ஆரல் நாளில்
விரதத்தை இயல்பின்
நோற்று
முப்புவனத்தின் வேண்டும்
முறைமையை அடைந்த
நீரார்
மெய்ப்படு தொகையையாரே
விளம்புவர் ஈதே யன்றி
ஒப்பரும் விரதம் வேறும்
ஒன்றுள துரைப்பக்
கேண்மோ

என்று விநாயகப்பெருமான் கந்தசட்டி விரதத்தைக் கார்த்திகை விரதத்துடன் இணைத்துரைத்தமை இவ் விசேடத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இவ் விரதங்களுக் குரிய ஒழுங்கு முறைகளை இக் காலத்தில் அன்பர்கள் நியமமாகக் கொள்வதரிது. அதனாலும் இந்த நோன்புக்குரிய பேறு கிடைப்பது அரிதாகின்றது. அவ்வளவோடமையாது விரதத்தை எளிமையாக்கும் செயல்களும் எழுகின்றன.

எனினும் மாவைக் கந்தன் மாவட்டத்தில் அடியார்கள் முறை வழுவாது கார்த்திகை கந்தசட்டி விரதங்களை அநுட்டித்த வண்ணம் சண்முகப் பெருமானை வணங்கி வருகின்றனர்.

கார்த்திகை விழாவிலே வழமையான காவடிக் காட்சி செழுமையாயிருந்தது. ஆயிரக்கணக்கான அடியார்கள் சுவாமி தரிசனம் செய்து மன நிம்மதி பெற வழிபட்டபடி நின்றனர்.

## சீர்பெருக இல்லறம் நடத்திய திருமதி உருத்திராதேவி மன்மதராஜன்

### சிவனடி சேர்ந்தனர் அவனருளாலே

முன்பு நெடுங்காலம் யாழ் மாநகர சபை உறுப்பினராகவும் துணை நகரபிதாவாகவும் விளங்கியவரும் சமாதான நீதிவானும் சைவப் பிரகாச அச்சக அதிபரும் ஆகும் திரு. இ- செ. மன்மதராஜன் அவர்களின் அருமைப் பத்தினி திருமதி உருத்திராதேவி -9 - 07 - 1988 இவ்வுலக வாழ்வு நீத்தனர்.

பிரபலமான பெருங்குடிச் சால்பினர், மலேசிய நாட்டிலே தோட்ட நிருவாக அதிகாரியாய் விளங்கிய திரு. இ. செல்வராயன் அவர்கள் புத்திரனாகிய திரு, மன்மதராஜன் அவர்களின் வாழ்க்கைத் துணையாக இல்லறம் எழிலாக நடத்திய திருமதி உருத்திராதேவி கணவனின் பல்வகைச் சமய சமூகத் தொண்டுகள், அறங்காவற் பணிகள் நிறைவாக நிகழ உறுதுணையாக அமைந்து அரும்பெறல் மக்கட் செல்வத்தால் மகிழ்ச்சியுற்று பெண்களுக்குரிய நாற்குணமும் பொருந்திய நாயகியாக விளங்கினர்.

சைவ பரிபாலன சபையில் நாற்பதாண்டுகளாக நிர்வாக அங்கத்தவராக அயராதுழைக்கும் திரு. மன்மதராஜன் அவர்கள் சில ஆண்டுகள் சபையின் பொருளாளர் ஆகவும் கடமை புரிந்தனர். அவ்வாறே இன்று சபையாரின் அச்சக அதிபராகப் பெருந் தொண்டாற்றுகின்றனர். இத்தனைக்கும் அவர்கள் உத்தம பத்தினி ஊக்கம் அளித்து வந்தனர். சிதம்பரம் நாவலர் புண்ணியநாச்சிமட தரும அறங்காவற் குழு அங்கத்தவர்பணி ஆற்ற அடிக்கடி கணவன் தென்னிந்தியப் பயணத்தை மேற்கொள்ளும்பொழுதெல்லாம் குடும்பப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுத் தருமப் பணிக் கருமம் தடையின்றி ஆற்ற வசதி செய்த இல்லத்தரசியின் பண்பு மிகச் சிறந்தது.

சைவ பரிபாலன சபையாரும் — அச்சக, இந்து சாதன அன்பர்களும் திருமதி உருத்திராதேவியின் ஆன்மா சாந்தியெய்த இறைவனைப் பிரார்த்திக்கின்றனர். திரு. மன்மதராஜன் அவர்களுக்கும் மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகளுக்கும் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றனர்.

## கல்விச் சேவையே கடமையாகக் கொண்டிருந்த திரு. இ. சபாலிங்கம்

### தம்பிரானடி சார்ந்தனர்

யாழ். இந்துக் கல்லூரியில், மத்திய கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிக் கல்வி வளம் இந் நாட்டிலே மல்க உழைத்தவர் திரு. இளையதம்பி சபாலிங்கம் அவர்கள். இங்கிலாந்திலே தனது ஓய்வு நாட்களை அங்குள்ள புத்திரர்களுடன் கழித்து வந்த திரு. சபாலிங்கம் அவர்கள் 04 - 08 - 88 திகதி காலமாகிவிட்டனர் என அறிகின்றோம்.

திரு. சபாலிங்கம் சமயசேவையிலும் அமைந்து யாழ் சைவ பரிபாலன சபை நிருவாக அங்கத்தவராகவும், உப தலைவராகவும், சைவப் பிரகாச அச்சக அதிபராகவும் நற்பணி ஆற்றி சமய நெறி பரவ நன்குழைத்தனர்.

புத்திரச் செல்வமும் - பேரர் விருத்தியும் உள்ளது இவர்கள் குடும்பம்,

இவர்களின் ஆன்மா இறை நிழலிலே சாந்தி பெறச் சபையாரும் அச்சகத்தாரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றனர்,


சைவ பரிபாலன சபையார்
நூற்றாண்டு விழா நிகழ்ச்சியாக
**சைவ சமயபாடப் பரீட்சை**
30. 4. 1989 வரை நிகழ்ச்சிகளில்
விசேடமானது: 6. 11. 88 ஆரம்பமாகும்.
பலபாடசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க
(15- 8- 88 வரை) விண்ணப்பமுடிவு நீடிக்கப்பட்டது.
பரீட்சைக் காரியதரிசி- 450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## பள்ளிப் பழைய மாணக்க மணிகளே!

# பரிவுடன் பணிவான வேண்டுதல்

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றபடி அறிவூட்டிய பள்ளிக்கூடங்கள் அன்னைகளாகவும், ஆகவே அவை கடவுளராகவும் கருதப்பட்டு வருகின்றனர். இப்பண்பு உலகமெங்கணும் உள்ளது.

மறக்க முடியாதனவற்றுள் நாம் கல்வி கற்ற கலைக்கூடங்கள், சிறப்பானவை. பள்ளிக்கூடப் பயிற்சி முடித்துக்கொண்டு வெளியேறியவுடன் பழைய மாணக்கன் என்று அழைக்கப்படும்பெருமைபெறப்படுகின்றது.

ஆனால் இந்தப் பழைய தொடர்புக்குரிய கடமைகளும் உண்டு என்பதைப் பலர் மறந்துவிடுகின்றனர்.

நன்றி மறவா நெறியாளர்கள் அவ்வாறு கடமை மறவார்கள்,

ஒருவர் ஒன்றின் மேற் பல கல்லூரிகளிலே கற்ற பெருமை உடையவராகும் பொழுது அத்தகையஎல்லா நிலையங்களுக்கும் அவர் மாணக்க மகனாகின்றனர். கடமையும் பல இடங்களில் அமைய வேண்டி வரும்.

பழைய மாணக்கன் ஒருவன் தன் கடமையை எவ்வாறு காப்பாற்ற வேண்டும், பள்ளிக்கூடம் கேட்டுப் பெறவேண்டுமா இவ்விதகடமையின் பயனை? அல்லது பழைய மாணக்கன் தானாக முனைந்து உரிய கடமையைப் புரிய வேண்டுமா? இவ் விரு வினாக்களுக்கும் விடை எவ்விதமிருப்பினும் கடமை புரியப்பட வேண்டும் என்பது வெளிப்படையான உண்மையாகும். கல்லூரி தன்னிடம் கற்றவர்களை நாட வேண்டும். கல்விப் பயிற்சி பெற்றவர்களும் உற்ற இடத்தைத் தேட வேண்டும், அவ்வாறமையின் கடமை பூரணமாகப் புரியப்படலாம்.

## ஆலாலசுந்தரர் புலவர்கள்பால் அபிமானம்

புரைதீர் புலமையே புலமை யென்ற கொள்கையைத் திருமுறைகளிலும் தெய்வானு கூலந்திகழும் மெய்யறிவுச் சாத்திரங்களிலும் சுட்டிக்காட்டப் பெற்றிருப்பதைக் காணலாம்

பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தைபுகலூர் பாடுமின் புலவீர்காள் என்று மெய்ம்மை நெறியுரைத்த சுந்தரமூர்த்திநாயனார், திருத்தொண்டர்களையும் தெய்வத்தையுமே பாடிய வன்றொண்டர், பூவுலகப் புலவர்களைக் கூவியழைத்துப் பாட்டெடுக்கும் பண்பைப்பல் வேறு இடங்களிற் காட்டியிருப்பதை ஏழாம்திருமுறையிற்காணலாம்

அர்ச்சனைக்குகந்தது பாட்டேயாகும் என்றுரைத்த குரவர்கூற்றினை உற்று நாக்கும் பொழுது புலமைக்கு இடம் தலைமையில் வகுக்கப் பட்டிருப்பதை ஊகிக்கலாம்

சைவ சங்கப் பலகைப் புலவர்களாக நாற்பெருங் குரவர் விளங்கினர் என்று சொல்லவும் வேண்டுங் கொல். ஆசானுக்குப் பாட அடி எடுத்துக் கொடுத்தவர் பேராசானும் தில்லைச் சிற்றம்பலவன் என்றால் செய்யுளும் அதை நெய்வோரும் எத்தகைய உத்தமம் என்பது புலப்படும்.

கற்றவர் பரவப்படுவானை ஏன் றோரிடத்திலே நாவலாரூரன் நற்றமிழ் சொல்லினர். இறைவன் தன்னடி தேடும் பொழுது பாடுவன் பாடுவன் பார்ப்பதி என்னடி போற்றி'' என்பது ங் காண்க. பாடும் புலவர்க்கருளும் பொருள் என்றனர் இன்னோரிடத்தில்

——

Hindu Organ
AUGUST (05-08-1988)

## Look about for lost culture

With the first centenary of the most humble HINDU ORGAN fast approaching and looming large within sight, we have become sufficiently old, but steady and stead fast in our abiding faith in THE ALMIGHTY, to beckon to the wide world that everyone can still make his life sublime.

Becoming exalted aud distinguished by noble thoughts and pious devotion to PROVIDENCE, we can by the enduring strength of inner purity, make bold to say most emphatically that godliness alone can relieve us of all distress.

That super, human being, which is real and eternal having sovereignty over nature and human affairs, is a symbol of the truth that enables us beings see the truth. We have been granted the vision of the world that is beyond the comprehension of even Devas.

The upsurge of evil in full force, almost all over the world is a sequel to human beings failing to understand the true purpose of life and faltering in their duties. unwittingly being driven to indulge in devilry; hence the raging fire of wanton destruction.

Yet, it is in tha nature of man to get back to normal ways of thinking and living; because the habit of religious practice reminds him of a saner approach to worldly affairs

We have come to the limit of endurance; the only way now open to us is to respond to our innate religious urge and develop our thinking in the direction of loftiness

Lost culture has to be regained.

## தீவினை - அதுதான் இன்று பாவனை

வெளிக் காட்டாமல் மறைந்து போய்க் கொண்டிருக்கும் சடையைவிடுத்து இன்னும் பார்ப்போமானால் திருநீறு மற்றொரு பெரிய சைவ அடையாளமாம் என்பர்.

திருநீறும் கண்டிகையும் வேணி முடியும் ஆகிய இவற்றையே தமது சைவ அரசாங்க அடையாளங்களாகக் கொண்டு அரசு செலுத்தியதால் மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனார் அப்பேர் பெற்றார் என்று தெரிகின்றோம் திருநீறு சைவர்கள் என்பவரிடத்திலே யன்றிக் கிறிஸ்தவர் மகமதியர் பவுத்தர் முதலியவர்களிடத்தும் ஒரோர் காலத்தில் ஏகதேசத்தில் கொண்டாடப் பெறுகின்றது. சைவர்களிடந்லோ என்றால் ஆறு அங்குல நீளம் அணியப் பெறுவது முதலாகிய விதிகளிலிருந்து சங்கார முறையிலே படிப் படியாய்ச் சோபானக்கிரமத்திற் குறைந்து கொண்டே வந்து

சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றும் என்ற திருவாக்கின் படி மாறி மாறிக் கடைசியாய்

அரைமாத் திரையிலடங்கும்படி" என்றபடி ஒரு அங்குலம், அரை பொட்டு பின்னர் அதையும் அழித்து விடுதல் என்று வந்து விட்டது. பரிதாபம்! நீற்றினை நிறையப்பூசுவதால் விருப் பெருமையையும் ஊதியத்தையும் எத்தனை வகையிலோ நமது பெரியார் சொல்லிவைத் திருந்தும் அனுபவத்தில் நடந்துகாட்டியிருந்தும் சைவர்கள் என்று கொள்ளும் இக் காலத்துச் சிறுவரும் பெரியவர்களும் கூட அதைப் பின் பற்றாதொழிந்து வருவது நமது தீவினையே யாகும்.

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் சஎ-வது ஆண்டு நிறைவு விழாவில் சைவத் திருவாளர் C. K சுப்பிர மணிய முதலியாரவர்கள் தலைமை வகித்து நிகழ்த்திய "உரையின் ஒரு பகுதி - "கலாவல்லி" ஏழாலை பிரமோதூத தை மாசி 193')

உதவியவர்
ம. சிதம்பரப்பிள்ளை
பாலர் ஞானோதய சபை: தெல்லிப்பழை

## பட்டமளிப்பு விழா

★ ★

27-06-88 ல் நிறைவு பெற்ற நவற்குழிஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகாகும்பாடிஷேகத்தினைப் பிரதம குருவாக இருந்து பக்திப் பரவசமாக ஆகம விதி வழுவாது நடாத்தி வைத்த ஆலய பிரதம குருவான சிவஸ்ரீ இ. சந்தசாமிக் குருக்களுக்கு பல சிவ சாரியர் களாலும் ஆலயபரிபாலன சபையாராலும் 'பிரதிஷ்டா கிரியா இரத்தினம்" என்னும் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்யப்பட்டது.

## சின்ன வெளியீடு ஆனால் பொன்னானது

திருத்தொண்டர் புராணம் வினா - விடை'- மாணவர்களுக்கு என்று காசிவிநாயகர் தேவஸ்தானப்பாலர் ஞானோதய சபையாரின் வெளியீடு பெற்றும்.

இந்தத் தேவஸ்தானம் இதற்குமுன் பெரியபுராண வசனச் சுருக்கம் ஒன்றை வெளியிட்டு மாணாக்கர்களுக்குப் பேருதவி புரிந்து வருகின்றது.

வினா - விடையாகச் சமயம் போதித்தவர் நாவலர் பெருமான் அந்த நன்முன் மாதிரியைப்பற்றி வெளிவந்த இந்த வினாவிடையை அமைத்தவர் காசிவிநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா சிவஸ்ரீ சிவ கணேசலிங்கக் குருக்கள். தமது தந்தையாரிடம் கல்வி பயின்று பின் வித்துவ சிரோமணி சி. கணேசையர் அவர்களிடம் கேட்டுத் தெளிந்து சுயமுயற்சியின் பயனாலே மொழியும் மதமும் நன்கறிந்துள்ள இளங் குருக்கள் இவர் அத்தேவஸ்தானத்திலே அவர்களின் தந்தையாரால் நிறுவப்பட்ட பாலர் ஞானோதய சபையை ஒருசைவப் பயிராக வளம்பெற நிகழ்ச்சி நீருட்டி வளர்த்து வருகின்ற வகையிலே இத்தகைய வெளியீடுகள் விளங்குகின்றன

அடக்கமானவர் அமைதியுள்ளவர் ஆனால் ஆற்றலிலே சிகமானவர் சிவஸ்ரீ சிவ. கணேசலிங்கக் குருக்கள் சிறுவர் சிற்சபை போல இத்தேவஸ்தானத்தின் வடபால் ஒரு மண்டபம் திகழ்கின்றது. தொடர்ந்துசமய நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெறுகின்றன. அறிஞர்கள் சிவநெறியாளர்கள் இங்கு கூடுவதுவழக்கம்.

இத்தகைய சபையின் நெறிக்குத்தக வினா விடை வெளியீடு திருத்தொண்டர்களைப் பற்றி மாணாக்கர்கள் இலகுவாக அறிந்துபயன் பெற வழிவகுக்கின்றது. இது நாவலர் நன்மரபு பேணும் நல்லார்களின் நயநெறியாகும்.

இந்த (தெல்லி) பாலர்ஞானோதயசபை இந்துசாதனஇதழைப் பொன்னேபோற் போற்றிப் பயனடைகின்றதுமல்லாது கட்டுரைகளையும் குருக்கள் அவர்கள் உதவி ஒரு பத்திராபிமானியாய விளங்குவதும் சைவபரிபாலன சபையாரின் நூற்றாண்டு நினைவில் எழுகின்ற சீருக்கு அணி செய்கின்றன.

## 'கலாவல்லி' இதழின் கணிப்பு

1931-ம் ஆண்டு இந்துசாதனப்பற்றி எழுதப்பட்டது)

யாழ்ப்பாணத்திலே சைவ சித்தாந்தச் சார்பாக வெளியிடப் பெறும் பத்திரிகைகளுள் ஆண்டில் முதிர்ந்து விளங்குவது இப் பத்திரிகையொன்றுமே. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் இற்றைக்கு 42 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்துப் பட்சத்திற்கொருமுறையாக வெளியிடப் பெற்ற இப் பத்திரிகை காலக்கிரமத்தில் உருவம் முதலியவற்றிலும் விருத்தியடைந்து கொண்டே வந்து இப்பொழுது வாரத்திற் கிருமுறை வெளி வருவதானது. இது நடத்தப் பெறும் செவ்விய முறையையும், யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் எத்துணையார்வத்தோடு இதை யாதரித்து வருகின்றனர் என்பதையும் காட்டுகின்றது. சமயத்துறையிலோ அரசியற்றுறை முதலிய பிற துறைகளிலோ நடுவு நிலைமை திறம்பாது ஊக்கத்தோடு நின்று தொண்டாற்றுவதில் இப் பத்திரிகை முன்னணியில் நிற்கின்றது. சமயம் மொழி முதலியவற்றில் அபிமானமுடையவராயும், சொல்ல வேண்டுமென்று தோன்றுவதைக் "கேட்டார் பிணிக்குந்தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்" என்னு மிலக்கியத்திற் கிசையச் சொற்சோர்பு படாது திறம்பட எடுத்து விளக்குதலில் வல்லவராயுமுள்ள ஆசிரியரொருவரைத் தற்காலம் இப் பத்திரிகை உடையதாயிருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் ஆண்டுக் கிரயம்: உள்ளூருக்கு ரு ...(5) இலங்கை - இந்தியாவுக்கு ரூ. 8. 00 தொடுவாய்ப் பகுதிக்கு ரூ. 9.00 (ம. சி.)

## அம்பாள் ஆலயத்தில் ஆலாலசுந்தரர் குருபூசையும் பரிசளிப்பு விழாவும்

[இவ் விழா புராணிகர் ப. கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள் சீரிய தலைமையில் நிகழ்ந்தது. அவ்வமயம் சைவபரிபாலனசபைத் தலைவர் திரு. சி. இராசேந்திரம் அவர்கள் விழா அமைப்பாளர்களையும் அதிற் கலந்துகொண்டு பணி புரிந்தவர்களையும் பாராட்டி அத்தகைய சைவநெறி எழுச்சி மிக அவசியம் எனக் குறிப்பிட்டனர். அவர்கள் கூறியதாவது ;-

'சொல்லுவன் கேள்நீ' என்று சொல்கின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

பிணிகொள் ஆக்கை பிறப்பிறப் பென்னும்
இதனை நீக்கி ஈசன் திருவடி யிணைக்கான்
துணிய வேண்டிற் சொல்லுவன் கேள் நீ
அஞ்சல் நெஞ்சமே வஞ்சர்வாழ் மதில்மூன்
றண்கொள் வெஞ்சிலை யாலுகச் சிலும்
ஐயன் வையகம் பரவிநின் றேத்தும்
திணியும் வார்பொழில் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே

8ஆம் திருமுறை — பண் - தக்கேசி
திருச்சிற்றம்பலம்

"சிவபெருமானது திருவருளால் 'நாயன்மார்கட்டு' எனும் நவமான நாமம் பொருந்திய கிராமத்திலே அமைந்த அருள்மிகு தலமாகிய அன்னை இராஜராசேஸ்வரி (பேய்ச்சியம்மை) அம்பாள் சந்நிதியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைவிழவை நடாத்தவும் மணிவாசகர் குருபூசை நெறியில் நடத்தப்பெற்ற திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றோர்களுக்குப் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கவும் நீங்கள் எடுக்கும் முயற்சிகளை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்

திருக்கோயில்களில் மாணவ மரணவிகள் சைவத் திருமுறைகளை ஓதிப் பயற்சி பெறுவது அவர்களின் ஒழுக்கத்துக்கும் சமய வளர்ச்சிக்கும் முக்கியமானது. இப்பணியில் மாணவர்களை ஊக்குவிக்கும் உங்களின் தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது.

நாவலர்பெருமானது இலட்சியங்களை நடைமுறைப் படுத்தக் கண்ணுயிருக்கும் எமது சைவ பரிபாலன சபை - நூற்றாண்டு விழாவைக்கொண்டாடும் பழம் பெரும் சபை — சமயத் தொண்டுகளை யெல்லாம் கிராமங்கள்தோறும் பரப்ப வேண்டுமென்று செயற்படும் இந்நாளிலே உங்கள் ஊரில் இது போன்ற மன்றங்கள் எல்லாம் இணைந்து நடத்தும் புராணபடனம், குருபூசைகள், திருமுறை மனனப் போட்டிகள், சைவ சமய மகாநாடுகள் முதலியவைகளை அறிந்து பெருமிதமடைகின்றோம்; அத்துடன் எங்கள் சபைக்கும் உங்கள்கிராமத்தில் வாழும் அறிஞர்களுக்கும் பல காலமாக நெருங்கிய தொடர்புகள் உண்டென்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றோம்; உதாரணமாக எங்கள் சபயின் முன்னைய தலைவராகிய முடிக்குரிய நியாயவாதி திரு. த. முத்துசாமிப்பிள்ளை அவர்கள் உங்கள்கிராமத்தில்உள்ள ஆலய பரிபாலன சபையின் மகாசபைக் கூட்டங்கள் இரண்டிற்கு தலைமை தாங்கி அதன் வளர்ச்சிக்குத் தொண்டாற்றி இருக்கிறார், அதுவுமல்லாமல் உங்கள் கிராமத்தில் உள்ள பல அறிஞர்கள் எங்கள் சபையில் அங்கத்தவர்களாக இருந்து பல அருந்தொண்டுகளாற்றி இருக்கிறார்கள் என்பதை அறிந்து பெருமிதமடைகின்றோம்

இறை பக்திக்கும் சமய வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றும் உங்கள் மன்றத்துக்கு சைவ பரிபாலன சபையின் சார்பில் எனது வாழ்த்துக்கள்.

"நால்வர் பொற்றாள் எம் உயிர்த் துணையே"

அ. இ. திருமுறைமன்ற ஆதரவில், யா. நாட் சைவ. ச. அ. கழகம், அரியாலை திருமுறை மன்றம் ஆகியன இணைந்து விழாவை நடாத்தின. ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் பரிசுகளை வழங்கினர். அரியாலை ஸ்ரீபார்வதிவித்தியாசாலை, மகேஸ்வரி வித்தியாசாலை, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகியாம் பாடசாலைகள் திருமுறை மனனப் போட்டியிற் கலந்து கொண்டன.

## நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராசேஸ்வரி அம்பாள் கோயில்

● யாழ்; நாயன்மார்கட்டு அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகாவிழா (4-8-1988) ஆடி 20ம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து நடைபெறும் விழாவில் 13-8-88 சனிக்கிழமை காலை 7 மணி, தேர் உலாவும், 14-8-88 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தமும் நடைபெற உள்ளது. விழாக் காலங்களில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டு அம்பிகை அருள் வேண்டிப் பிரார்த்தித்து வருகின்றார்கள்.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி 4'0 ஆம் இலக்கத்திலுள்ள சபையாரது சைவப் பிரகாச அச்சகத்தில் 1988 ஆம் ஆண்டு ஆடி மாதம் (05 — 08 — 1988) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தொலைபேசி இல: 22356
ஆசிரியர் நம. சிவப்பிரகாசம்